Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன் 389

தேசிய தினசரி

மலர் 13
இதழ் 295

சாதாரண ஸ்ரீ கார்த்திகை 20 ஷவ்வால் 17 திங்கட்கிழமை (6-12-71)

நவநாகரிக
நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்
ஹரன்
ஜுவல்லர்ஸ்
போன் 444
தந்தி இரத்தினமஸ்
50, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

## கிழக்கு பாகிஸ்தானில் இந்திய விமானங்கள் சுதந்திரமாகப் பறந்து திரிகின்றன!

புதுடில்லி, டிச.5

கிழக்குப் பாகிஸ்தானில் இந்திய விமானங்கள் இப்போது சுதந்திரமாகப் பறந்து திரிவதாகக் கடைசியாகக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

பாகிஸ்தானுக்குச் சொந்தமான சகல விமானங்களையும் கிழக்கு பாகிஸ்தானில் நொருக்கிவிட்டதாகவும் வானத்தில் இப்போது எதிரிகளின் எவ்வித விமானத் தாக்குதலுமில்லாமல் தமது விமானங்களை வட்டமிட்டுக் கொண்டிருப்பதாகவும் இந்திய வானொலி கூறுகிறது.

இருநாட்கள் நடந்த போரில் 47 பாகிஸ்தான் விமானங்களை இந்தியா வீழ்த்திவிட்டதாகக் கூறுகிறது.

கிழக்குபாகிஸ்தானில் இப்போது 11 நகரங்களை பாரதம் கைப்பற்றியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இந்தியப்படை இன்று நடந்த உக்கிரமான தாக்குதலில் கிழக்குப்பாகிஸ்தானில் லக்சம், அகோரா ஆகிய இரு அரங்குகளைக் கைப்பற்றியது.

சிட்டகாங் துறைமுகத்தில் தொடர்ந்து இந்தியப் படை தாக்குதலை நடத்திக் கொண்டிருக்கிறது.

லாகூர் பகுதியில் பாரதப் படை தொடர்ந்து தாக்குதல் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது

கிழக்கு பாகிஸ்தானில் இந்தியப்படையினரைப் பற்றிய ஒரு நகரத்தில் 6 ஆயிரம் மக்கள் இறந்து கிடக்கக் காணப்பட்டதாகவும், பாகிஸ்தான் ராணுவத்தினரின் அட்டூழியத்துக்கு இந்தக் கோரக் கொலைகள் நடந்ததாகவும் கடைகள் சூறையாக்கப்பட்டிருந்ததாகவும், வீடுகளெல்லாம் இடிந்தும் தரைமட்டமாகியிருந்ததாகவும் பாரதப்படை இராணுவ அதிகாரி பொருவர் தெரிவித்தார்.

# கராச்சியில் குண்டுவீச்சு; பாக். நாசகாரி மூழ்கடிப்பு

## சிந்து பகுதியில் இந்திய படைகள் பிரவேசம்

## போர் நிறுத்த தீர்மானத்தை ரஷ்யா 'வீட்டோ' செய்தது!

புதுடில்லி, டிசம்பர். 5

மேற்குபாகிஸ்தானில் ராஜஸ்தான் பகுதியிலுள்ள சிந்துக்குள் இந்தியத்துருப்புகள் புகுந்துள்ளதாக இன்று கடைசியாகக்கிடைத்த செய்திகள் கூறுகின்றன.

பாகிஸ்தானின் மிகப்பெரிய துறைமுகங்களில் ஒன்றான கராச்சித்துறைமுகத்தை இந்திய கடற்படைக் கப்பல்கள் இன்று குண்டுவீசித் தாக்யுள்ளன.

இப்பகுதியில் பாகிஸ்தான் நாசகாரிக்கப்பலொன்றை இந்தியக் கப்பல்கள் மூழ்கடித்துள்ளன. வங்காள கடலில்வைத்து பாகிஸ்தான் நீர்மூழ்கிக் கப்பலொன்றையும் இந்தியக் கடற்படைமூழ்கடித்துள்ளது.

கிழக்கு அரங்கில் சிட்டகாங் துறைமுகத்தில் இன்று மீண்டும்தாக்குதல் நடத்திய இந்திய விமானங்கள் 6 கப்பல்களைச் சேதப்படுத்தியதாக அறிவிக்கப்பட்டது.

இந்தியாவையும், பாகிஸ்தானையும் போர் நிறுத்தம் செய்யும்படி கோரி ஐ. நா. பாதுகாப்புசபையில் அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானத்தை சோவியத்யூனியன் தனது 'வீட்டோ' அதிகாரத்தைப்பயன்படுத்தி ரத்துசெய்துள்ளது.

மேற்கு அரங்கில் இந்தியப் துருப்புகள் சிந்து பகுதியில் ஊடுருவியுள்ளதாக இன்று பிற்பகல் கிடைத்த செய்திகள் கூறுகின்றன

மேற்குப் பாகிஸ்தானில் சத்ரா சாலைக்கு மேற்கே உள்ள கஜ்னூர் பகுதியில் இந்தியப் படைகள் நிலைகொண்டுள்ளதாகச் செய்திகள் கூறின.

கராச்சிக்கு அப்பால் கடலில் நடந்த ஒரு சண்டையில் 'ஹைபர்' என்ற பாகிஸ்தான் நாசகாரிக்கப்பல் தாக்கப்பட்டதாகவும், அது அநேகமாக மூழ்கியிருக்க வேண்டுமென்றும் இந்திய அதிகாரிகள் கூறினர்கள்

சாஜசான் என்ற இன்னொரு கப்பலையும் இந்திய கடற்படையினர் பலமாகத் தாக்கி சேதப்படுத்தினார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

### இந்தியர் மறுப்பு

நேற்று மேற்குப் பாகிஸ்தானில் இஸ்லாமபாத் நகருக்குச் சமீபத்தில் பொது மக்கள் வாழும் பகுதிகளில் இந்திய விமானங்கள் தாக்குதல் நடத்தியதாகப் பாகிஸ்தான் தெரிவித்த குற்றச்சாட்டுகளை இந்திய அதிகாரிகள் இன்று [illegible] விமானத்தளம் ஒன்றின் மீது தான் தங்கள் படைகள் குண்டு வீசின என்று அவர்கள் கூறினார்கள்.

நேற்றிரவு பாகிஸ்தான் விமானங்கள் இந்தியப் பகுதியில் பறந்து 4 விமானத்தளங்கள் மீது 7 தடவைகள் குண்டு வீசியதாக இந்திய அதிகாரிகள் ஒப்புக்கொண்டனர்.

ஹுசேனிவாலா பகுதியில் இடம்பெற்ற கடும் சண்டையில் இருதரப்புக்கும் பலத்த சேதம் ஏற்பட்டதாகத் தெரியவருகின்றது. இங்கு [illegible] இந்தியப்படைகள் நாசம் செய்

தனவாம்.

### கண்ணியமாக நடத்த உத்தரவு

கிழக்கு அரங்கில் கமால்பூரில் சரணடைந்த பாகிஸ்தான் ராணுவ வீரர்களைக் கண்ணியமாக நடத்தும்படி இந்திய ராணுவத் தளபதி ஜெனரல் மானெக்ஷா கிழக்கு அரங்கில் செயல்படும் ராணுவத்தலைமை அதிகாரிக்கு உத்தரவிட்டுள்ளார். இப்பகுதியில் 160 மேற்குப்பாகிஸ்தானிய ராணுவ வீரர்கள் தமது தளபதியுடன் இந்திய ராணுவத்திடம் நேற்றுச் சரணடைந்தார்களாம்

ஆகஷ்ரா வீழ்ச்சியடைந்ததை இந்திய இராணுவத்தினர் பெரும் வெற்றியாகக் கருதுகிறார்கள். இன்று காலை 7 மணிக்கு இந்நகரம் இந்தியப்படைகளிடம் வீழ்ச்சியுற்றதாக அறிவிக்கப்பட்டது. இந்த இடத்திலிருந்து கடந்த பல தினங்களாக இந்திய நகரமான ஆகர்தலா மீது பாகிஸ்தான் படைகள் பீரங்கித் தாக்குதலை நடத்திவந்தனவாம்

(5 பக்கம் பார்க்க)

## 46 இந்திய விமானங்களை நொருக்கிவிட்டோம்!

— பாகிஸ்தான்

இரு நாட்கள் நடந்த யுத்தத்தில் 46 இந்திய விமானங்களை நொருக்கிவிட்டதாக பாகிஸ்தான் வானொலி அறிவிக்கிறது. ஐந்து இந்திய விமானிகளைப் பிடித்துவைத்திருப்பதாகவும் அது கூறுகிறது.

கிழக்குபாகிஸ்தான் துறைமுகத்தில் பாரதப்படையினரால் பிடிக்கப்பட்ட சரக்குக் கப்பலும், கப்பலிலிருந்த 25 மாலுமிகளையும் மிகவும் பாதுகாப்புடன் கொச்சிக்கு இழுத்துச்செல்வதாக புதுடில்லிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

உலக அதிசயங்களில் ஒன்றான 'தாஜ்மகால்' உள்ள ஆக்ராவில் சண்டை நடப்பதாகவும் ஒரு செய்தி தெரிவிக்கிறது.

---

## ரஷ்யா எச்சரிக்கை

மாஸ்கோ. டிச 5

பாரத-பாகிஸ்தான் போரில் உலகவல்லரசுகளை விலகி நிற்குமாறு சோவியத் யூனியன் எச்சரிக்கை விடுத்துள்ளது. 'டாஸ்' இந்த எச்சரிக்கையை அறிவித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உபகரணங்கள், ஓட்டுவேலைகள், பல்லுச்சக்கரம் வெட்டுதல் (Gear wheel cutting) என்ஜினியர்களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராதா மெசின் கொம்பனி 95, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 3790

அதிக முட்டையிட்டு அதிக இலாபம் அடைய உங்கள் கோழிகளுக்கு உணவில் சிப்பித்தூள் சிப்பித்துண்டுகளைச் சேர்த்துக் கொள்ளவும்! மொத்தமாகவும் சில்லறையாகவும் பெறலாம். முகமதி கிரைண்டிங் மில்ஸ் 443, கே. கே. எஸ். ரோட். யாழ்ப்பாணம். 3754

### வைத்தியம்

வாதம், இரத்தி. தொய்வு ஆகிய வியாதிகளை முற்றாகக் குணப்படுத்து வதில் திறமை பெற்ற டாக்டர் எஸ். வல்லிபுரம் (D. A. M.) தங்க பாஸ்கரன் வைத்திய சாலை, இராசாவீதி, நல்லூர் மார்க்கெட், யாழ்ப்பாணம். 3748

'நட்சத்திர இரவு'

இன்று (6-12-71) யாழ் திறந்த வெளியரங்கில் நடைபெறவிருந்த நட்சத்திர இரவு கலை நிகழ்ச்சி கடும் மழை காரணமாக பின் போடப்பட்டுள்ளது.
2688 திரை.

### விற்பனைக்கு

ராதா பிளட்டானிக் இரத்தசுத்தி, இரத்த விருத்தி, தாது புஷ்டி மருந்து. சோம்பல், பலவீனம், நரம்புத் தளர்ச்சி பசியின்மை முதலிய நோய்களுக்குச் சிறந்த நிவாரணி எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, யாழ்ப்பாணம், கொழும்பு. 3789

நாவற்குழி - வீடுகட்டுவதற்கேற்ற நான்கு பரப்பு விஸ்தீரணமான ஐந்து காணிகள். நல்ல தண்ணீர். மின்சாரம், போக்குவரத்து வசதிகள் உள. செரிய கடையிலிருந்து பஸ் கூலி இருபத்தைந்து சதம். ஏற்கனவே முப்பது காணிகள் விற்பனையாகிவிட்டன. நேரில் மனுச் செய்க. லான்ட் இன்வெஸ்ட்மென்ட், 6, பிரதானவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7453 3798

### விற்பனைக்கு

"ஹென்ஸ்மென் தோட்டம்" எனப்பெயர்கொண்ட முதல்தரமான தோட்டக் காணி. 32 பரப்புகள் அளவுடையது. சண்டிலிப்பாயில் பிரதான பண்டத்தரிப்பு ரோட்டில் இருக்கின்றது. யாழ்ப்பாணம். இலங்கை வங்கி. திரு. என். அரியரத்தினத்துடன் தொடர்பு கொள்ளுங்கள். 3346


யாழ். தியேட்டர்
(காங்கேசன்துறை
தினசரி 6-15, 9-30
சனி - ஞாயிறு 2-30
சிவாஜி- ஜெயலலிதா
நடித்த
எங்கிருந்தோ வந்தாள்

2-வது வாரம்
வெல்லி சினிமா
(மானிப்பாய்)
தினசரி 6-30, 10-00
சனி, ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
எங்க வீட்டுப் பிள்ளை
[புதிய கொப்பி]

சாந்தி சினிமா
(சுன்னாகம்)
தினசரி 6-15, 9-30
ஞாயிறு பி. ப. 2-30
முத்துராமன் - ராஜ்ஸ்ரீ
நடித்த
ராமா விஜயம்

நாகம்ஸ் சினிமா
களுவம்
தினசரி மாலை 4-30
சனி, ஞாயிறு 10-30
SIEGE OF THE SAXONS
தினசரி, 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
தாய் மகளுக்குக் கட்டிய தாலி

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, இரவு 9-30
சனி, ஞாயிறு பி.ப. 2-30
ஜெமினி-கே. ஆர். விஜயா
மாஸ்டர் பிரபாகர்
நடித்த
ராமு

MANOHARA
(Jaffna)
தினசரி பி.ப 6-30
இரவு 10-00 மணி
சிவாஜி - விஜயா
நடித்த
கறுப்புப் பணம்
Daily: 10-30 a.m, 3-45 pm
IT IS A MAD, MAD, MAD WORLD

RAJAH - Jaffna
Daily 10-30 a. m.
4-15, 7 & 9-45 p. m.
BANCO FOR A GOLD KILLER
(Eastman Color)


## நாவலர் குருபூசை

யாழ்ப்பாணம், திங்கள்
இம்மாதம் 8ம் திகதி புதன்கிழமை யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரால் நாவலர் ஆச்சிரமமண்டபத்தில் நாவலர்குருபூசை நடத்தப்படவிருக்கிறது.

முற்பகல் 9 மணி தொடக்கம் மத்தியானம் 12 மணி வரையும் சிவபூசை, நடராஜர் பூஜை, நாவலர் பூஜை, சற்குணமணிமாலை ஓதுதல், மகேசுர பூஜை ஆகியன இடம்பெறும்.

மாலைநடைபெறும் பொதுக் கூட்டத்திற்கு திரு. க. சோமசுந்தரம் தலைமைவகிப்பார். யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் தமிழ் மறை ஓதுதல், யாழ். இந்துக் கல்லூரி மாணவர்களின் நாவலரைப்பற்றிய பேச்சுக்களையடுத்து, நாவலர்தவம், நாவலர்பணிகள், நாவலர் நூல்கள் என்ற விஷயங்கள் பற்றி முறையே திருவாளர்கள் மு. சதாசிவம், க. சொக்கலிங்கம், அ. பஞ்சாட்சரம் ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள்.

...

## ஆண்டு விழா

சுழிபுரம், ஞாயிறு
பண்டத்தரிப்பு திருக்குறள் சனசமூகநிலையத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவும், வருடாந்தப் பொதுக்கூட்டமும் இம்மாதம் 11ந் திகதி நடைபெறவிருக்கிறது.

சனசமூகநிலையத் தலைவர் திரு. எஸ். மாணிக்கம் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் பண்டத்தரிப்பு பட்டினசபைத் தலைவர் திரு. இ. செல்வரத்தினம், பண்டிதர் ப. இராசஐயா ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.


REGAL Jaffna
Daily 10-30 a. m.
5-15, & 7-15 p.m.
Jean Gabin
Alain De on
in
THE CLAN SICILIAN
(Cinemascope - color)
பி. ப. 2-00, இரவு 10-00
ஜெமினி—சரோஜாதேவி
நடித்த
ஐந்து லட்சம்


"இவர்களுக்கு

## சிங்களம் 5-ம் வகுப்பு அவசியமில்லை"

குருநகர், ஞாயிறு
"அரசாங்க சேவையில் உள்ள கனிஷ்ட ஊழியர்களின் நியமனங்கள் பெரும்பாலும் மாவட்ட ரீதியில் தான் செய்யப்படுகின்றன. தமிழ் ஐந்தாம் வகுப்பு சித்தியடையாத சிறு ஊழியர்கள் 1956-ம் ஆண்டுக்குப் பின் சேவை அநுபவத்தில் பதவி உயர்ச்சி அடைந்துள்ளனர். அவ்வாறுள்ள ஊழியர்களை சிங்களம் ஐந்தாம் வகுப்பு சித்தியெய்துமாறு கோருவது மிகவும் கஷ்டப்படுத்துவதாகும்."

இவ்வாறு யாழ்ப்பாணத்திற்கு விஜயம்செய்த பொது நிர்வாக உள்ளூராட்சி உள்நாட்டு உதவி அமைச்சருக்கு அரசாங்க பொதுசேவைத் தொழிலாளர் சங்க யாழ். கிளை சமர்ப்பித்த மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. யாழ். செயலகத்தில் அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மேற்படி சங்கம்இதனைச் சமர்ப்பித்தது.

---

## பிரியாவிடை

சாவகச்சேரி, ஞாயிறு
வீமன்காமம் ஆங்கில மகாவித்தியாலயத்தில் கடந்த 36 வருடங்கள் ஆசிரியராகவும், உதவி அதிபராகவும் கடமையாற்றி இம்மாதம் ஓய்வு பெறும் பண்டிதர் இ. நமசிவாயத்துக்கு பிரியாவிடை விழா ஒன்றை கல்லூரி ஆசிரியர்கள், பழையமாணவர், பெற்றோர் ஆகியோர் சேர்ந்து நடாத்த ஒழுங்குசெய்துள்ளனர்.

---

## 'சேவையாகக் கருதவேண்டும்'

உடுப்பிட்டி, ஞாயிறு
வைத்தியப்பணி புனிதமானது இத்தொழிலை இலாபம் பெறுவதற்காகச் செய்யாது சேவையாகவே கருதவேண்டும்' என்று நெல்லியடியில் நாதன்மெடிக்கல் நிலையத்தைத் திறந்துவைத்துப்பேசுகையில் வைத்தியர் திரு. எஸ். வேலுப்பிள்ளை குறிப்பிட்டார். திரு ஏ சிற்றம்பலம் தலைமையில் விழா நடைபெற்றது.


ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சரோஜாதேவி
நாகேஷ்-விஜயநிர்மலா
நடித்த
பணமா? பாசமா?

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி: 2-30, 6-30, 10-00 சனி, ஞாயிறு: 10-30
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
முத்துராமன்
விஜயநிர்மலா
அசோகன்

நடித்த
என் அண்ணன்

லிடோ
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்
வாணிஸ்ரீ
சாவித்திரி
அசோகன்
நாகேஷ்
சுந்தரராஜன்

நடித்த
மனசாட்சி

வின்ஸர் யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்
★ சிவாஜி ★ சாவித்திரி ★ நம்பியார்
நடித்த
பிராப்தம்

ராதா மணி மார்க்
சந்தனாதித் தைலம்
கூந்தல் உதிர்வதையும், இளநரையையும் தடுத்து கூந்தலை நீண்டதாகவும், அடர்த்தியாகவும், பளபளப்பாகவும் வளரச்செய்யும்.
தினந்தோறும் தலையில் தேய்த்துவருதலால் தலையிடி, கபால இடி, ஓயாத தும்மல் பீனிசம், கண்களிலிருந்து நீர்வடிதல், நித்திரையின்மை முதலிய சிரநேத்திர நோய்களைக் குணப்படுத்தும். அநேக விலை உயர்ந்த மூலிகைகளைச் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட ஓர் ஒப்பற்ற கூந்தல் தைலம்.
எங்கும் கிடைக்கும்
தயாரிப்பாளர்கள்:-
ராதா பெர்பியூமறி அன் ராதாபுறடக்ஸ்
(Radha Perfumery & Radha Products)
ஏகவிநியோகஸ்தர்கள்
எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி
(மருந்து, மருந்துச்சரக்கு, வாசனைதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த சில்லறை வியாபாரிகளும்)
53, கே. கே. எஸ். ரோட், பெரியகடை, யாழ்ப்பாணம். போன்: 541 Residence: 7068
"பாலேந்திரா பில்டிங்" 160, செட்டியார் தெரு, கொழும்பு-11. போன்: 35825


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்கு அரங்கில்: பாக். படைகள் பல இடங்களில் பாரதத்துக்குள் பாய்ச்சல்

## கிழக்கில் மேலும் பல இடங்கள் இந்தியரிடம் வீழ்ச்சி

புதுடில்லி, டிச.5

**இந்திய விமானங்கள் இன்று அதிகாலையில் மீண்டும் பாகிஸ்தானிலுள்ள ஆறு விமானத்தளங்கள்மீது குண்டுகளை வீசிவிட்டுத் திரும்பி வந்துள்ளன.**

இதே வேளையில் கடந்த இரவு 4 இந்திய விமானத்தளங்கள்மீது பாகிஸ்தான் விமானங்கள் குண்டுகளை வீசித் தாக்கிவிட்டுத் திரும்பிச் சென்றுள்ளன.

கிழக்கு வங்காளத்திலுள்ள அனேகமாக எல்லா விமானத் தளங்கள் மீதும் நேற்று இந்திய விமானங்கள் குண்டுவீசித் தாக்கியுள்ளன. அங்கு பாகிஸ்தான் ராணுவத்தின் விமானப்படையின் பலம் வெகுவாகக் குறைந்து விட்டதாகக் கூறப்படுகின்றது.

மேற்கு அரங்கில் பல இடங்களில் பாகிஸ்தான் துருப்புகள் இந்தியாவுக்குள் நுழைந்து விட்டதாக பாகிஸ்தான் வானொலி அறிவித்தது.

பஞ்சாப் பகுதியில் இந்தியப் படைகள் சில இடங்களில் தம் நிலைகளிலிருந்து விலகியுள்ளதாக இந்திய அதிகாரிகள் ஒப்புக்கொண்டுள்ளனர் என்று பி.பி.ஸி. நிருபர் அறிவிக்கிறார்.

இந்திய விமானங்கள் மேற்கு பாகிஸ்தானில் வெகுதூரம்வரை ஊடுருவிப் பறந்து தாக்கியுள்ளதாகவும் கராச்சி விமானத்தளத்தின் மீதும் குண்டுவீசியுள்ளதாகவும் கூறப்படுகிறது.




பாகிஸ்தான்-பாரத யுத்தத்திற்கு காரணமான கிழக்குப் பாகிஸ்தானை [பங்களாதேஷ்] காட்டும் படம்.

## இந்திய - பாகிஸ்தான் அரசுகளின் இராணுவ பலம்

| படைகள் | பாரதம் | பாகிஸ்தான் |
|---|---|---|
| தரைப்படை | 860,000 | 365,000 |
| ரிசேர்வ்படை | 500,000 | 250,000 |
| எல்லைப்படை | 100,000 | 30,000 |
| பீரங்கிகள் | 30.00 | 1,100 |
| டாங்கிகள் | 1,500 | 81 |
| விமான எதிர்ப்புப் | | — |
| பீரங்கிப் படை | 20 | |
| **விமானப்படை** | | |
| சண்டை விமானங்கள் | 625 | 285 |
| விமானப்படை வீரர் | 80,000 | 17,000 |
| **கடற்படை** | | |
| சண்டைக் கப்பல்கள் | 588 | 86 |
| விமானந்தாங்கி கப்பல் | 1 | — |
| நீர்மூழ்கிக் கப்பல்கள் | 4 | 4 |
| சண்டைக்கப்பல் | 3 | 1 |
| நாசகாரிகள் | 3 | 2 |
| நாசகாரித் துணைக் கப்பல் | 9 | 3 |
| பெரிய ரக சண்டைக் கப்பல் | 9 | 2 |

இந்தியா மிக் நவீன சோவியத், பிரிட்டிஷ், பிரெஞ்சு சண்டைவிமானங்களை வைத்திருக்கிறது. அத்துடன் உள்நாட்டில் செய்யப்படும் 'நாட்' போர் விமானங்களும் உண்டு.

பாகிஸ்தானிடம் ரோந்துப் படகுகளும், சரக்கு வாரிக் கப்பல்களும் ஏராளமாக உண்டு.

## கிழக்கு அரங்கில் மேலும் பல நகரங்கள் வீழ்ச்சி

கிழக்கு அரங்கில்மேலும் பல நகரங்களை இந்தியப்படைகள் கைப்பற்றியுள்ளன. மைமன்சிங். கொமில்லா பகுதிகளில் இந்திய படைகள் முன்னேறிக்கொண்டிருக்கின்றன. சமால்பூர் விமானத்தளம் கைப்பற்றப்பட்டுள்ளது. நேற்றுக்காலையில் இந்தியப்படைகள் கிழக்குப் பாகிஸ்தானுக்குள் நுழைந்த சில மணி நேரத்துக்குள் 5 கிராமங்களைத் தம்வசப் படுத்திக்கொண்டுள்ளன.

முக்திவஹ்னி என்று அழைக்கப்படும் கிழக்கு வங்க விடுதலைப்படையினருடன் இந்தியப் படைகள் இணைந்து செயல்பட்டு வருகிறார்கள்.

## 'முதுகெலும்பு முறிந்தது'

ஆகர்த்தலாவுக்கு அருகிலுள்ள முக்கிய ரயில் நிலையமான ஆகவுரா இந்திய படைகளிடம் வீழ்ச்சியடைந்துள்ளது. மேற்குப்பாகிஸ்தான் படைகளுக்கு வெடிமருந்துகளும் இதர தளபாடங்களும் கொண்டுபோவதற்கு இந்த ரயில்நிலையம் கேந்திரஸ்தானமாக விளங்கிவந்தது. இது வீழ்ச்சி யடைந்ததின் காரணமாக கிழக்கு வங்காளத்தில் மேற்குப் பாகிஸ்தான் ராணுவத்தின் முதுகெலும்பு முறிக்கப்பட்டுவிட்டது என இந்திய ராணுவ அதிகாரி ஒருவர் கூறினார்.

திருஷ்பூரில் மேலும்இரு கிராமங்கள் வீழ்ச்சியடைந்துள்ளன, முதல்நாளன்றே இந்திய விமானங்கள் கிழக்குப் பாகிஸ்தானிலுள்ள எல்லா விமானத் தளங்கள் மீதும் குண்டுவீசித் தாக்குதல் நடத்தின. ஏராளமான பாகிஸ்தான் விமானத்தளங்களையும் தகர்த்தெறிந்தன சிட்டாகொங் துறைமுகத்தின் மீது இருதடவைகள் இந்திய விமானங்கள் தாக்குதல் நடத்தின.

மேற்குப் பாகிஸ்தானில் சமால்பூர் சர்கோதர், மீயாவாலு ஆகிய விமானத்தளங்கள் உட்பட ஆறு விமானத் தளங்கள்மீது இன்று காலையில் இந்திய விமானங்கள் குண்டுவீசித் தாக்கியுள்ளன.

இதேசமயம் இந்தியாவில் அமிர்தசரஸ், ஆக்ரா ஆகியவை உட்பட நான்குவிமானத்தளங்கள்மீது கடந்த இரவு பாகிஸ்தான் விமானங்கள் குண்டுவீசித் தாக்கியுள்ளன.

மேற்குப் பாகிஸ்தானில் ஒரு குன்றுப் பகுதியையும் காஷ்மீரத்துக்கு சமீபத்திலுள்ள பிங்வால் நகரத்தையும் இந்திய படைகள் கைப்பற்றியுள்ளதாக செய்திகள் கூறுகின்றன.

மேற்கு அரங்கில் பல முனைகளில் பாகிஸ்தான் படைகள் நுழைந்துள்ளதாக பாகிஸ்தான் அதிகாரிகள் அறிவித்துள்ளனர். பஞ்சாப்பில் பலநிலை விலிருந்து இந்திய படைகள் நகர்ந்துள்ளதாக பி.பி.ஸி. நிருபர் தெரிவித்துள்ளார்.

ஹூசேனி வாலாவுக்கு அருகில் இரு தரப்பினருக்குமிடையில் உக்கிரமான போர் நடைபெற்று வருவதாகக் கூறப்படுகின்றது.

## இந்தியாமீது யு. எஸ். குற்றச்சாட்டு

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் ஏற்பட்டுள்ள சண்டைக்கு இந்தியாவை அமெரிக்க ராஜாங்க அமைச்சு குறைகூறியிருக்கின்றது.

ஆரம்பத்திலிருந்தே நிலைமை மோசமானதற்கு இந்தியாதான் காரணமாக இருந்துள்ளது என ராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

எல்லைப்பகுதியில் ஐ நா பார்வையாளர்களை நிறுத்துவதற்கு இந்தியா ஆரம்பத்திலிருந்தே எதிர்ப்புத் தெரிவித்துவந்துள்ளது என்றும் கிழக்கு வங்காள கொரில்லாக்களுக்கு உதவிசெய்து வந்துள்ளது என்றும் அமெரிக்க அரசு குற்றஞ்சாட்டியுள்ளது.

## பாதுகாப்புச் சபை அவசர ஆலோசனை

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் போர் வெடித்துள்ளதுபற்றி ஆலோசிப்பதற்காக இன்று காலையில் ஐ நா பத்தேசபாதுகாப்புச் சபை அவசரமாகக் கூடியது

கிழக்குப் பாகிஸ்தான் பற்றி எந்தமுடிவும் எடுப்பதற்கு முன்னர் கிழக்கு வங்காளப் பிரதிநிதிகளையும் அழைத்து அவர்களின் கருத்தையும்

என்று பல நாடுகள் கருத்துத் தெரிவித்தன. வங்காள தேசப் பிரதிநிதிகளைக் கூப்பிட்டு அவர்கள் கருத்தை அறியவேண்டும் என்று சோவியத் பிரதிநிதிகூறினார்

கிழக்குவங்கப் பிரதிநிதிகளையும் அழைத்து விசாரிப்பதா இல்லையா என்பது பற்றி முடிவு எடுக்கப்பட்டதா என்பதுபற்றி இன்று காலை வெகுநேரம்வரை தகவல் கிடைக்கவில்லை.

## இன்று கவிப்

யாழ்ப்பாணம், திங்கள்

தேசிய லோகத்தர் சபையின் 373வது கவிப் இழுப்பு இன்று மாலை 5-15 மணிக்கு கொல்லுப்பிட்டியிலுள்ள தேசிய லொத்தர் சபை காரியாலயத்தில் நடைபெற விருக்கிறது.

## சோவியத்பிரதமர் கண்டனம்

இந்தியஉபகண்டத்தில் ஏற்பட்டுள்ள நிலைமைக்கு பாகிஸ்தான் காரணம் என்றும் கிழக்குப் பாகிஸ்தானில் ஜனநாயகத்தை பாகிஸ்தான் ராணுவ நிர்வாகம் நசுக்கிவிட்டதாகவும் சோவியத் பிரதம மந்திரி திரு கொஸிஜின் கூறியிருக்கிறார்.

அமைதியை நிலைநாட்ட தமது நாடு தன்னால் ஆனவைபெல்லாம் செய்யுமென்றும் அவர் கூறியிருக்கிறார்.

இந்தியாவுக்கு அமெரிக்க பொருளாதார உதவியை நிறுத்துவதுபற்றி அமெரிக்க அரசு ஆலோசித்து வருவதாகவும் ஒரு செய்தி கூறுகின்றது.

## பாக். விமானப்படை செயல் இழப்பு

கிழக்கு வங்காளத்தில் இந்திய விமானங்கள் விமானத்தளங்கள் பலவற்றின் மீதும் கடும் தாக்குதல்களை நடத்தியிருப்பதால் அங்கு மேற்குப் பாகிஸ்தான் விமானப்படை செயல் இழக்கும் நிலையில் இருப்பதாக இந்திய ராணுவத் தளபதிஒருவர்கூறினார்.

விமானங்கள் நடவடிக்கையில் இறங்க முடியாமலிருப்பதால் காயமடைந்த சிப்பாய்களை எடுத்துச்செல்ல முடியாமலிருப்பதாகவும் இதனால் பாகிஸ்தான் படைகள் மத்தியில் கட்டுப்பாடு குலையும் நிலை ஏற்பட்டிருப்பதாகவும் இந்திய விமர்சகர் ஒருவர் தெரிவித்தார். இந்திய விமானங்கள் மேலும் பலமாகத் தாக்கும் வாய்ப்பைப் பெற்றிருப்பதாகவும் மேற்குப் பாகிஸ்தான் படைகள் இனி சரணடைவதைத் தவிர வேறு வழியில்லையென்றும் அந்த விமர்சகர் கூறினார்.

[4-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'உள்ளத் தூய்மையால் உயர்வடையலாம்'

யாழ்ப்பாணம், திங்கள்

"உள்ளத் தூய்மையுள்ளவர்கள் உயர்வை அடைவார்கள். மனிதன் எவ்வளவுக்கு உள்ளத் தூய்மையுடன் வாழ்கின்றானோ அவ்வளவுக்கு இந்த உலகமும் உயர்வடையும்"

இவ்வாறு நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியெய்திய யாழ். இலக்கிய சேவைசெய்யும் இலக்கிய வட்ட உறுப்பினர் செங்கை ஆழியானைப் பாராட்டிப் பேசிய திரு. ஏ. வி. பொன்னுத்துரை கூறினார். யாழ் இலக்கிய வட்டத்தினால் செங்கை ஆழியானுக்கு அளிக்கப்பட்ட தேநீர் விருந்தில் தொடர்ந்து பேசிய திரு. பொன்னுத்துரை மேலும் குறிப்பிடுகையில், சமுத்திரமான இலக்கிய வட்டத்தின் வளர்ச்சிக்கு அயராது உழைத்த பெருமை செங்கை ஆழியானுக்கும் உண்டும் என்று கூறினார்.

யாழ். மாநகரசபை பொழுதுபோக்கு மண்டபத்தில் மதுரகவி இ. நாகராஜன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கவிஞர் வி. கந்தவனம் பேசுகையில் தமது அயரா முயற்சியால் முன்னுக்கு வந்த பெருமை செங்கை ஆழியானுக்கு உண்டு என்றும் அவர் போன்ற ஊக்கமுள்ள இளைஞர்களே இன்றைய சமுதாயத்துக்குத் தேவை என்றும் கூறினார்.

இரசிகமணி கனக செந்திநாதன் பாராட்டுரை வழங்கும்போது, செங்கை ஆழியானது படைப்பாற்றலையும் இனிய பண்பையும் வியந்துரைத்தார். தேநீர் விருந்திற்கு வந்த அனைவருக்கும் கூட்டமுடிவில் யாழ். இலக்கியவட்ட செயலாளர் கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை நன்றி தெரிவித்துப் பேசினார்.

# 'கூட்டுறவு இயக்கம் சமத்துவத்தை வளர்க்கிறது'

யாழ்ப்பாணம், திங்கள்

"ஒவ்வொரு ஐக்கிய நாணயசங்கமும் அதன் அங்கத்தவர்களுக்கு கிராம வங்கியாக மிளிர்கின்றது. கூட்டுறவு இயக்கம் சமத்துவத்தையும் தன்னம்பிக்கையும், கலந்துரையாடலையும், அறிவையும், அங்கத்தவர்களின் பொருளாதாரத்தையும் வளர்க்கிறது."

தோப்புக்காடு ஐக்கிய நாணய சங்கப் பொதுக்கூட்டத்தின்போது சங்கத்தலைவர் திரு. க. குமாரகுரு தலைமைவகித்துப் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், தன்னலம் கருதுவர்கள் ஐக்கிய இயக்கங்களில் இருந்து களைந்தெறியப்படல் வேண்டும் என்றும் அப்பொழுதான், ஐக்கிய இயக்கங்கள் புனிதமடையும் என்றும் குறிப்பிட்டார்.

கூட்டுறவுக்கலாசாலை விரிவுரையாளர் திரு. க. சிவசுப்பிரமணியம், திரு. பொ. செல்வரத்தினம், திரு. ஏ. கனகசபை, திரு. ந. தண்டாயுதபாணிக்குருக்கள் உட்படப் பலர் உரையாற்றினர்.

# 'கடமையைச் செய்தால் உரிமைகள் கிடைக்கும்'

யாழ்ப்பாணம் திங்கள்

கடமையை உணர்ந்து சரிவரச்செய்தால் உரிமைகள் தாமாகவே கிடைக்கும் என்று உதவி அரசாங்க அதிபர் திரு வி. முருகேசம்பிள்ளை கூறினார்.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மண்டபத்தில் காரியாதிகாரி திரு. இ. தம்பரப்பிள்ளை தலைமையில் நடந்த ஐக்கியநாடுகள் ஸ்தாபனவிழாவில் திரு. முருகேசம்பிள்ளை தொடர்ந்து கூறியதாவது:

ஐக்கியநாடுகள் ஸ்தாபனம் இலங்கை அரசிற்கு விவசாய அபிவிருத்தித் திட்டம் வளம்பெறப் போதியளவு உதவுகிறது

புதுரகமான நெல்லு வகைகளை ஆராய்ச்சிசெய்து தருகின்றது. அப்படியான புதுரகநெல்லை நாம் பயன்படுத்தினால் ஏக்கருக்கு 140 புசல்வரை அறுவடை செய்ய வாய்ப்பாகும்,

உருளைக்கிழங்கு உற்பத்தி செய்ய ஆரம்பத்தில் எமது விவசாயிகள் அக்கறை காட்டாதுவிட்டார்கள். ஆனால் இன்று 1500 அந்தர் விதை கிழங்குவரை நாம் அரசாங்கத்திடமிருந்து பெற்று விவசாயிகளுக்கு வழங்கவேண்டியுள்ளது.

வஞ்ச உபபொருட்களான பயறு உழுந்து கிழங்கு வெண்காயம் மிளகாய் போன்றவற்றையே யாழ்ப்பாண மாவட்டத்தில் உற்பத்திசெய்ய அரசாங்கம் திட்டம் செயற்படுத்தவுள்ளது.

திரு வி திவ்வியராசா திரு சுந்தரலிங்கம் விவசாய விஸ்தரிப்பு உத்தியோகஸ்தர் திரு பொன்னுண்டோ திரு வீ கந்தசாமி வழக்கறிஞர் எஸ் கே திரவியநாயகம் பண்டிதர் செ சிவலிங்கம் ஆகியோரும் பேசினார்கள்.

(கு வி ம)

## இன்று ஆலோசிப்பர்

யாழ்ப்பாணம், திங்கள்

இன்று நடைபெறும் யாழ் இந்துக் கல்லூரிப் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் மாணவர் அனுமதி மற்றும் இடவசதி சம்பந்தமாக ஆராயப்படும். கல்லூரிபிரார்த்தனை மண்டபத்தில் இன்று பிற்பகல் இக்கூட்டம் நிகழும்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

திங்கட்கிழமை

(6-12-71)

(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45 மாலை 6-00, இரவு 9-00)

294 மீ ஆண் 59 மீ

காலை 6-15 நாதாஞ்சலி, 6-20 வைகறைச் சிந்தனை, 6-25 இதிஷ்டவநற்சிந்தனை, 7-00 இசைச்சித்திரம், 7-15 அதிப்பாடல், 7-30 குரல்வகை, 8-00 இசை வேளை, 8-15 இஸ்லாமிய கீதம்,

இரவு 6-15 தமிழோசைப் பாடல், 6-30 பாட்டு, 7-00 நாடகம் — வாழ்க்கை வாழ்வதற்கே, 7-15 நாட்டுப் பாடல் சித்திரம், 7-30 வெளிநாட்டுச்செய்திகள், 7-35 மறக்கமுடியாத பாடல்கள், 7-45 கண்டதும் கேட்டதும், 8-00 ...

## வர்த்தக பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், திங்கள்

வர்த்தகக்கமன்றம் அகில இலங்கை ரீதியில் நடத்திய வர்த்தகபாடங்களின் போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகள் வருமாறு:-

10-ம் தரம்: (தமிழ்)

கணக்கியல்: எம். இன்னராசா, சம்மாந்துறை மகாவித்தியாலயம், சம்மாந்துறை. ரி எம் ஸாஜஹானவுள்ளத் ஜெய். பி இராமநாதன் கதிரேசன் குமார வித்தியாலயம், தாவலப்பிட்டி.

வர்த்தகம்: எம் வைதாசா கல்முனை ஸாஹிரா மகாவித்தியாலயம், கல்முனை ஏ சி மொகைதீன்தம்பி கல்முனை ஸாஹிரா மகாவித்தியாலயம் கல்முனை. ஏ எல் ஏ நஸீர் கல்முனை ஸாஹிரா மகாவித்தியாலயம் கல்முனை.

9ம் தரம் (தமிழ்)

கணக்கியல்: 1ம் இடம்: பி இரத்தினநாதன் நயினாதீவு மகாவித்தியாலயம் நயினாதீவு. 2ம் இடம் எஸ் இலங்கேஸ்வர நயினாதீவு மகாவித்தியாலயம், 3ம்இடம் எம் ரீ அஸ்மன் கல்முனை ஸாஹிராக்கல்லூரி கல்முனை.

வர்த்தகம்: 1ம் இடம் பி இரத்தினநாதன் நயினாதீவு மகாவித்தியாலயம் நயினாதீவு, 2ம் இடம் எஸ் எஸ் குருள் வந்தாறுமூலை மகாவித்தியாலயம் செங்கலடி, 3ம் இடம் பி ஜெயராஜன் எருக்கலம்பிட்டி மகாவித்தியாலயம் எருக்கலம்பிட்டி.

10-ம் தரம் (ஆங்கிலம்)

கணக்கியல்: ஏ எஸ் ஐ லத்தீப் ஸஹிரா கல்லூரி கம்பளை, ஏ ஜீ எம் பாரூக் ஸஹிரா கல்லூரி கம்பளை. ஹஸன் மொஹிதீன் ஸஹிரா கல்லூரி கம்பளை

9-ம் தரம் (ஆங்கிலம்)

கணக்கியல்: ஏ எல் யூ கல்ஹார ஸஹிரா கல்லூரி கம்பளை, எம் மொஹமட் பாறெஸ் ஸஹிரா கல்லூரி மாத்தளை, ஜே எம் பைஸர் ஸஹிரா கல்லூரி மாத்தளை

......

## கரடி தாக்கியது

தர்மபுரம், ஞாயிறு

காடு வெட்டச் சென்றவரைக் கரடி தாக்கியது. தர்மபுரத்தைச் சேர்ந்த ஆர். இராசு என்பவரே இவ்வாறு கரடியின் தாக்குதலுக்கு இலக்கானவராம். முகத்திலும் தலையிலும் கடுமையான காயங்களுக்குள்ளான இவர் இப்போது யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## வருடாந்த இராப்போசனம்

சாவகச்சேரி, ஞாயிறு

பாடசாலையின் முன்னேற்றத்திற்கு கட்டிடவசதியின்மைபெருங் குறையாக உள்ளன. இக்குறையை நீக்குவதற்கு பெற்றோரும் வித்தியாதிபதியும் ஆவன செய்ய வேண்டும். தற்போது வகுக்கப்பட்டுள்ள புதிய கல்வித் திட்டத்தை தகுந்த முறையில் புகட்ட ஆசிரியரும் நானும் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

இவ்வாறு மட்டுவில் தெற்கு அ. மி. த. க. பாடசாலையின் வருடாந்த விருந்து வைபவத்தின் போது பேசியபாடசாலை அதிபர் திரு. வல்லிபுரம் குறிப்பிட்டார். சாவகச்சேரித் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வ. ந. நவரத்தினமும், வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வெ. கந்தசாமியும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினர். ஆசிரியர் திரு. சண்முகம் நன்றியுரை கூறினர்.

140 ரூ. அபின் வைத்திருந்தார்

# 20 ஆயிரம் ரூபா அபராதம்!

மாவிட்டபுரம், ஞாயிறு

பல லட்சம் ரூபாய் பெறுமதியான அபின் வைத்திருந்தாராம், அவருக்கு 20 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி திரு. பொ. இராஜேஸ்வரன் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி ஒன்று தையிட்டியில் உள்ள வீடு ஒன்றில் சோதனை நடத்தியபோது அவ்வீட்டிலிருந்து 140 ரூத்தல் அபின், 25 முடைக்கு சேற்பட்ட பீடிப்புகையிலை ஆகியவற்றைக் கைப்பற்றியது. இது சம்பந்தமாக ஒருவரைக் கைது செய்து விசாரணை செய்த இக்கோஷ்டியினர் பிரஸ்தாப நபரையும் பொருள்களையும் சுங்கப் பகுதியினரிடம் ஒப்படைத்தனர்.

சுங்கப் பகுதி விசாரணையின் பின் பிரஸ்தாப நபருக்கு அபின்வைத்திருந்த குற்றச்சாட்டுக்கு 20 ஆயிரம் ரூபாவும், பீடிப்புகையிலை வைத்திருந்த குற்றத்திற்கு ஆயிரம் ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டதுடன் பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

# "கேதீஸ்வரத்தில் கனிதரும் மரங்களை நாட்டவேண்டும்"

யாழ்ப்பாணம், திங்கள்

"சுமார் 3000 வருடங்களுக்கு முன்பு அகில உலகத்திலும் தரமான பட்டுப்புடவை இன்று திருக்கேதீச்சரமென்று கூறப்படும் மாதோட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்டது

சாவகச்சேரியில் நடந்த திருக்கேதீச்சர திருப்பணிச்சபைக் கூட்டத்தில் உதவி அரசாங்க அதிபர் திரு. வி. முருகேசம்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்

அவர் மேலும் கூறியதாவது:- மாதோட்டத்தின் சிறப்பை சிரேக்க நாட்டுப் பாடல் மூலம் அறியலாம். கேதீச்சரத்தில் எழுந்தருளியுள்ள சிவன்கோவிலைப் பல பேரறிஞர்கள் முன்னின்று திருப்பணி செய்தும் மூலஸ்தானம் எமது சந்ததியினர் திருப்பணி செய்யவேண்டிய தற்காக விடப்பட்டதுபோலும் அதை நாம் செய்யும் பெறுபேறும்

முற்காலத்தில் அந்தத்தலம் அருள்பாலித்ததை நாம் அறிந்துள்ளோம் அதனை புனருத்தாரணம் செய்யவேண்டும்.

திரு. என். சபாரத்தினம் பேசும்போது கூறியதாவது: "மாதோட்டத்தில் இன்று மாங்கனிகளோ இளநீரோ பெறுவது கஷ்டம். முன்பு நாயன்மார் பாடிய தேவாரப்படி மாவின் கனி தந்தபோது இல்லை அது அக்காலத்தில் சிறப்பாக இருந்தது. ஆனால் கோவில் தேவைக்கும் அவற்றைப் பிற இடங்களிலிருந்தே பெறப்படுகின்றன. நாம் திருப்பணிக்குப் போதியளவு உதவிசெய்யவேண்டும். அங்கு கோவில் தேவைக்குக் கனி தருமரங்களையும் நாட்டவேண்டுமென்றார். கேதீச்சரநாதர் பேரருள் பொலிவு நிறைந்தவர். காலஞ்சென்ற பெரியார்கள் சிவபாதசுந்தரனார். வைத்தியநாதன் போன்றவர்கள் அதை உணர்ந்துள்ளனர். நாம் யாபேரும் திருப்பணிக்கு உதவவேண்டுமென்றார்

(கு வி ம)

# சண்டையை நிறுத்தக் கோரும் தீர்மானம்

[3ம் பக்கத் தொடர்ச்சி]

பாகிஸ்தான் - இந்தியா ஆகிய இருநாடுகளையும் யுத்தத்தை நிறுத்தக்கோரும் தீர்மானம் ஒன்றை அமெரிக்கா, பிரிட்டன், இத்தாலி, சோமாலியா, ஜப்பான் போன்ற நாடுகள் பாதுகாப்புச் சபையில் தாக்கல் செய்துள்ளன.

இந்தியாவையும் பாகிஸ்தானையும் போர்நிறுத்தம் மேற்கொள்ளும்படி கோரப்படுவதை இந்தியா நிராகரிக்கும் என்று இந்தியப் பிரதிநிதி அறிவித்திருக்கிறார். கிழக்குப்பாகிஸ்தான்மக்களுக்கும் மேற்குப்பாகிஸ்தான் அரசுக்கு மிடையில்தான் சண்டை ஆரம்பமாகியது. எனவே அவர்களிடத்தான் சண்டையை நிறுத்தும்படி கோரவேண்டும் என்று திரு. சமர்சென் கூறினார். ஏற்கனவே பாகிஸ்தான் பிரதிநிதிசபையில் பேசியதைக் குறிப்பிட்ட இந்திய நிரந்தரப்பிரதிநிதி அவர் மேற்குப் பாகிஸ்தானுக்காகமாத்திரமே பேசினார். கிழக்குப் பாகிஸ்தான் மக்களுக்காக இங்குபேச எவரும் இல்லை என்றார்.

இருநாடுகளையும் சண்டையை நிறுத்தும்படியும் எல்லைகளிலிருந்து படைகளை வாபஸ்பெறும்படியும் கோரும்தீர்மானத்தைஅமெரிக்க அரசாங்கமே முன்மொழிந்துள்ளது. இத்தீர்மானத்துக்கிசைவாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் பற்றி சபைக்கு அறிவிக்கும் படியும் தீர்மானத்தில்கோரப்பட்டுள்ளது.

## மந்திரிக்கு மகஜர்

சுழிபுரம், ஞாயிறு

அரசினர் மருத்துவ நிலையங்களில் மருந்துகலவையாளராக கடமையாற்றும் சிறுசேவை ஊழியர் தரத்திலுள்ள டிஸ்பென்சர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள எட்டாம் வகுப்பு சிங்களதேர்ச்சி நிபந்தனையை குறைக்குமாறு டிஸ்பென்சர்களின் யாழ். கிளைச்சங்கம் அரசாங்கத்தை கேட்டுள்ளது.

இதுசம்பந்தமான விரிவான மகஜர் ஒன்று பொது நிர்வாக, உள்நாட்டு உள்ளூராட்சி அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதன் பிரதிகள் தபால்தந்தி தொடர்பு அமைச்சர் திரு செ குமாரசூரியருக்கும் மற்றும்தமிழ்ஆட்சிமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## இலவச பாலர் வகுப்பு

காரதீவு, ஞாயிறு

காரதீவு இளந்தமிழர் மன்றத்தினர் அடுத்த ஆண்டு முதல் பாலர் பாடசாலை ஒன்றை இலவசமாக நடத்த முன்வந்துள்ளனர். பாடசாலைப்பிரவேச வயது ஆறாக அதிகரிக்கப்பட்டதால் கிராமசிறுர்கள் எதிர்நோக்கவிருக்கும் இன்னலைப்போக்குமுகமாகவே இப்பாடசாலையைத்தமது மன்றமண்டபத்தில் நடத்த மன்றத்தினர் முன்வந்துள்ளனர். இதன் பொறுப்பாளராக மன்றப் பொதுச்செயலாளர் திரு ந இராசதுரை இருப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

சக்தியும் சிரத்தையும் குறையும்போது நாட்டில் தீயசக்திகள் தலையெடுக்கின்றன. அன்பும் அறமும் குறையும்போது பலாத்காரமும் வழிப்பறியும் மோசடியும் நிகழ்கின்றன. தெய்வநிந்தனையும் மொழிவெறியும் ஏற்படும்போது மனிதனைச் சுர அசுர நிலை மேற்கொள்ளுகிறது. உண்மையைப் பேசப் பயம் ஏற்படும்போது அச்சமும் அடிமைத் தனமும் வரவே ஆரம்பிக்கிறது. — மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

சாதாரண ஸ்ரீ விரோதிகிருது வருஷம் கார்த்திகை மாதம் 20-ந் திகதி (6-12-71)


## பாக். - இந்திய யுத்தம்

இந்திய உபகண்டத்தில் முழு அளவில் யுத்தம் ஆரம்பித்துவிட்டது. கால் நூற்றாண்டுக்கு முன்னர் சகோதரர்களாக வாழ்ந்த மக்கள் இன்று ஒருவருடன் ஒருவர் சண்டையிட்டு மடிவது கண்டு இந்திய மக்களோ பாகிஸ்தான் மக்களோ மகிழ்ச்சியடைய முடியாது. ஆசிய தலைதூக்கக் கூடாது என்ற நோக்கமுள்ளவர்களுக்கும் உலகில் எந்த மூலையில் சண்டை மூளும், எங்கு உதவியென்ற பெயரால் இலாபம்பெறலாம் என்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கும் சில வல்லரசுகளுக்கும் இது மகிழ்ச்சியைக் கொடுக்கக்கூடும். ஆனால் நமது அயலில் நமது நண்பர்கள் ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டு மாண்டு மடிவது கண்டு நாம் நிச்சயம் மகிழ்ச்சி கொள்வதற்கில்லை.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் நாடு பிரிவினையான காலத்திலிருந்து "காஷ்மீர்" காரணமாக பகைமையே வளர்ந்துள்ளது. காஷ்மீர் பிரச்னை பற்றி ஐ. நா. வில் நீண்டகாலமாக விவாதிக்கப்பட்டும் பாதுகாப்புச்சபை பல தீர்மானங்களை நிறைவேற்றியும் அவை யாவும் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமுள்ள பகைமையைக் குறைக்கவோ நட்புறவை ஏற்படுத்தவோ உதவவில்லை. 1965-ம் ஆண்டிலும் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையில் போர் மூண்டது. ஐ. நா. பாதுகாப்புச்சபை போரை நிறுத்தும்படி இருநாடுகளையும் கோரி ஒரு தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றியது. போரும் நிறுத்தப்பட்டது. போர்நிறுத்தத் தீர்மானத்துடன் ஐ. நா. தன் கடமை முடிந்துவிட்டதாகக் கருதியது போலும்!

பாகிஸ்தானில் பொதுத் தேர்தல் நடந்ததும் அத் தேர்தலில் கிழக்குப் பாகிஸ்தானுக்கு சுயநிர்ணய உரிமை கோரும் ஷேக்முஜிபுர் ரஹ்மானின் தலைமையிலான அவாமிலீக் மிகப் பெரும்பான்மைப் பலத்துடன் வெற்றியீட்டியதும் அதைத் தொடர்ந்து கிழக்குப் பாகிஸ்தானின் தேசியசபை கலைக்கப்பட்டு அவசரகாலநிலை பிரகடனப்படுத்தப்பட்டதும் முஜிபுர் உட்பட அவாமிலீக் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டதும் இராணுவ நடவடிக்கை காரணமாக கிழக்குப் பாகிஸ்தானியர் லட்சக்கணக்கில் இந்தியாவுக்குள் அகதிகளாகத் தஞ்சம்புகுந்ததும் உலகறிந்த விஷயம்.

கிழக்குப் பாகிஸ்தான் பிரச்னை பாகிஸ்தானின் உள்நாட்டு விஷயமென்று கூறப்பட்டதில் தவறு சொல்லமுடியாது. ஆனால் கிழக்குப் பாகிஸ்தானின் இந்த மக்கள் லட்சக்கணக்கில் வெளியேறி இந்தியாவுக்குள் அகதிகளாகத் தஞ்சம் புகுந்த பின்னர் அதை உள்நாட்டுப் பிரச்னையென்று சொல்வது சரியாகாது. இன்று இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் யுத்தம் மூண்டு எந்தச்சமயம் என்ன நடைபெறுமோவென்று எதுவும் நிச்சயமாகச் சொல்லமுடியாத நிலையில் கிழக்குப் பாகிஸ்தான் பிரச்னை உள்நாட்டுப் பிரச்னையென்றும், இந்திய-பாகிஸ்தான் பிரச்னை இந்திய உபகண்டப் பிரச்னையென்றும் சொல்லி உலகம் சும்மா இருந்துவிட முடியுமா? இப்போதுள்ள நிலையில் இந்தியாவுக்கு சோவியத் யூனியனும் பாகிஸ்தானுக்கு சீனாவும் உதவி அளிக்கமுன்வந்து இதற்கு அமெரிக்காவும் தாளம் போட்டால் மூன்றாவது உலக யுத்தம் இந்திய உபகண்டத்திலேயே ஆரம்பிக்கும் ஆபத்து ஏற்படமாட்டாதா?

கிழக்குப் பாகிஸ்தான் பிரச்னை பெரும் பிரச்னையாகி இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் மோதலை ஏற்படுத்துமென்பது அமெரிக்கா போன்ற வல்லரசுகளுக்குத் தெரியாத விஷயமல்ல.

போர் ஆரம்பிக்கும் என்று தெரிந்திருந்தும் அதன் அடிப்படைப் பிரச்னையை ஆராய்ந்து தீர்வுகாணமுற்படாமல் போர் மூண்டபின்பு ஐ. நா. பாதுகாப்புச் சபையைக்கூட்டி போரை உடனடியாக நிறுத்த வேண்டும். போரில் ஈடுபட்டுள்ள நாடுகள் தம் படைகளை பழைய நிலைகளுக்குத் திரும்ப அழைத்துக்கொள்ள வேண்டுமென்று கோரித் தீர்மானம் நிறைவேற்றுவதும் ஒரு சம்பிரதாயமாகிவிட்டது. இதனால் போரில் சேதமடைந்த நாடுகளுக்கு மீண்டும் புதிதாக ஆயுதங்கள் விற்பனைசெய்வதற்கு வல்லரசுகளுக்கு வாய்ப்பு ஏற்படுமே தவிர அந்த நாடுகளுக்குள் பகைமை தீர வழிபிறக்காது.

இந்தவகையில் இம்முறை சண்டையை நிறுத்தும்படியும் தத்தமது படைகளை பழைய நிலைகளுக்கு வாபஸ் பெறும்படியும் இந்தியாவையும் பாகிஸ்தானையும் கோரும் அமெரிக்காவின் பிரேரணையை பாதுகாப்புச் சபையில் சோவியத்யூனியன் தனது வீட்டோ எனப்படும் ரத்து அதிகாரத்தைப் பாவித்து ரத்துச்செய்ததைக் குறைசொல்ல இடமிருக்காது.

வல்லரசுகள் விலகி நின்று கிழக்குப் பாகிஸ்தான் தலைவர்களுடன் மேற்குப்பாகிஸ்தான் ஆட்சியாளர்கள் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு தீர்வுகாண முன்வர வேண்டும். இதுவே இந்திய உபகண்டத்தில் அமைதி நிலவவும் இந்தியாவும் பாகிஸ்தானும் வளர்ச்சியடையவும் உதவமுடியும்.

நமது நாட்டைப் பொறுத்தவரையில் ஏற்கனவே பொருளாதார நெருக்கடியில் நாம் சிக்குண்டு அலைக்கழிக்கப்படுகிறோம். அயலில் நண்பர்கள் மோதிக் கொள்வது நமது நிலைமையை மேலும் மோசமாக்கும். "தாஷ்கண்ட்" ஒப்பந்தப்படி பின்வாங்கிடாலும்கூட பாகிஸ்தானின் உள்நாட்டுப்பிரச்னை என்ற ரீதியிலாவது கிழக்குப்பாகிஸ்தான் தலைவர்களுடன் மேற்குப்பாகிஸ்தான் தலைவர்கள் பேச்சுவார்த்தை நடத்தவும் அதன்மூலம் இந்தியாவின் 'தலையீட்டை' தடுக்கவும் நாமும் நமது செல்வாக்கைப் பயன்படுத்த முன்வருவது எவ்வகையிலும் தவறாகாது என்பதே நமது கருத்து.

# 'தவறணைகளைப் பெறக்கூட்டுறவுச் சங்கங்களை நிறுவுங்கள்'

## சீவல் தொழிலாளர்கள் ஆலோசனை

கைதடி, திங்கள்

"தவறணை முறை வரப்போகிறதென்பதை நன்கு தெரிந்தபின்னரும் அதனை மாற்றமுடியாது என்றுதெரிந்த பின்னரும் சில தலைவர்கள் கட்சிகளும் மகாநாடுகளும்கூடி மரவரி முறையை நீடிப்போம் என்று அப்பாவித் தொழிலாளர்களிடம் கூறிவருகிறார்கள். வரவு-செலவுத் திட்டத்துடன் தவறணை முறையும் பெரும்பான்மைவாக்குகளால் நிறைவேறிவிட்டது. நமது சமூகத்தின் பிரதிநிதியும் அதற்கு ஆதரவாக வாக்களித்து விட்டார். இனி இதைப் பற்றிப் பேசிப் பயனில்லை."

தவறணை முறை அமைப்பு பற்றி கைதடி நேற்றிரவு நடந்த சீவல் தொழிலாளரின் ஆலோசனைக் கூட்டத்தில் தேவைத்தை சேவா மன்ற செயலாளர் திரு பி செல்லத்துரை மேற்கண்டவாறு கூறினார்.

திரு பொன் செல்லையா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு செல்லத்துரை மேலும் கூறியதாவது: மரவரி முறையை நீடிக்கவேண்டுமென அரசுக்கு எண்ணமிருந்தால் சீனி, மாவு போன்று உடனடியான மாற்றம் ஏதாவது நடந்திருக்கும். தவறணைகளை முதலாளிகளிடம் போகவிடாது நமது சமூகத்தவர்களாகிய கள்ளுத் தொழிலாளர்களிடையே கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து அவர்களுக்கே கொடுக்கவேண்டுமென முதன்முதல் நமது தேவைத்தை சேவாமன்றம் நிதி அமைச்சரைக் கேட்டுக்கொண்டது. ஆகவே நாம் இனிச் செய்யவேண்டியது ஆங்காங்கு தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து வரப்போகும் தவறணைகளைப் பெற ஆயத்தமாக வேண்டும்.

திரு பொன் செல்லையா பேசும்போது கூறியதாவது: 20 மரங்கள்தான் ஒருவருக்கு என்ற மரவரி முறையை மீறி 200 மரங்கள் வரை கூலித்தொழிலாளரைக் கொண்டு கள்ளுச்சேர்த்தவர்களும், தொழில் நடத்திக்கொண்டிருப்பவர்களும் அவர்களுடைய குடும்பங்களும் உயர்வடைந்திருப்பதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. குட்டி முதலாளிகள் மரவரி முறையினாலல்ல, மரவரிமுறையை மீறி நடந்துதான் முன்னேறினார்கள். இப்படி மரவரி முறையை மீறிநடந்து முன்னேறினவர்கள்தான் இன்று மரவரிமுறை சிறந்ததெனக் கூறுகிறார்கள். ஆனால் இவர்கள் தங்களின் பிள்ளைகளை இந்தத் தொழிலில் ஈடுபடுத்தாது வேறுவழியில் திருப்பிவிடுகிறார்கள். மரவரிமுறை இல்லாவிட்டால்தான் சாதிமுறையும் அற்றுப்போகும். தவறணை முறை சாதிமுறையைத் தானாகவே அகற்றுகிறது. தவறணை முறையினால் தொழிலாளர் உயர்வடைவார்கள். காப்புறுதித் திட்டம் வரும். நிர்ணய சம்பளம் கிடைக்கும். எதிர்பாராத விபத்துக்கள் நேரும்போது தகுந்த பாதுகாப்புக் கிடைக்கும். லீவு நாட்களில் சலுகைகள் கிடைக்கும். கள்ளுச் சீவத்தெரியாத இளைஞர்களுக்கும் விற்பனையாளர், பரிசோதகர்கள் போன்ற பதவிகள் கிடைக்கும். திரு சின்னத்தம்பி, திரு வி செல்லத்துரை ஆகியோரும் பேசினார்கள்.

## கராச்சியில் குண்டுவீச்சு

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஐ. நா. பாதுகாப்புச் சபையில் அமெரிக்கா கொண்டுவந்ததீர்மானத்தை சோவியத் யூனியன் தனது 'வீட்டோ' அதிகாரத்தைப் பயன்படுத்திச் செயலிழக்கச் செய்துவிட்டது.

போரிடுவதை நிறுத்திப் படைகளை எல்லைகளிலிருந்து அப்புறப்படுத்த வேண்டும் என்று பாகிஸ்தானையும் இந்தியாவையும் கேட்டுக்கொள்வதாக இந்தத் தீர்மானம் அமைந்திருந்தது. இதன் மீதான விவாதத்தை 24 மணி நேரம் பின்போட வேண்டுமென்று முன்னதாகச் சோவியத் யூனியன் எடுத்த முயற்சியைச் சபை நிராகரித்துவிட்டது. ஆனால் தீர்மானம் மீது ஆலோசனை நடத்துவதற்கு 20 நிமிட அவகாசம் அளிக்கப்பட்டது.

இந்தியாவையும் பாகிஸ்தானையும் போர் நிறுத்தம் செய்யுமாறு கோரப்பட்டால் இந்தத் தீர்மானத்தை இந்தியா நிராகரிக்குமென்று இந்தியப் பிரதிநிதி ஏற்கனவே அறிவித்திருந்தார்.

தீர்மானம் விவாதத்திற்கு வந்தபொழுது சோவியத் யூனியன் தனது ரத்து அதிகாரத்தைப் பயன்படுத்தி அதனை 'வீட்டோ' செய்தது.

## 'நட்சத்திர இரவு' நிகழ்ச்சி இன்று நடைபெறாது

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் திறந்த வெளியரங்கில் இன்றிரவு நடைபெறவிருந்த 'நட்சத்திர இரவு' நிகழ்ச்சி தவிர்க்க முடியாத காரணத்தினால் நடைபெறாதென்று அமைப்பாளர்கள் அறிவித்துள்ளனர்.

'திரை' சஞ்சிகை ஆதரவில் நடைபெறவிருந்த இவ்விழாவில் கொழும்பு மற்றும் உள்ளூர் நாடகக் கலைஞர்களின் நடன நாட்டியநிகழ்ச்சிகள் இடம்பெறவும், ஈழத்துச் சினிமாத்திரைப்பட முன்னணி நட்சத்திரங்கள் தமிழ்த்திரை நடிகர்கள், நாடக நடிகர்கள் காட்சிதரவும் மற்றும் பலவகை இசைநிகழ்ச்சிகள் நடைபெறவும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன ஆனாலும் சில நாட்கள் யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து பெய்யும் மழைகாரணமாக எதிர்பாராதவிதமாக இந்நிகழ்ச்சிகள் இன்று நடைபெறாது ரத்துச் செய்யப்பட்டுள்ளன

---

## வாழ்நாள் முழுதும் துணை நிற்கும்

உடுப்பிட்டி, ஞாயிறு

"கோவில்களுக்குச் செல்வதால் மட்டும் அருள் பெற முடியாது. இறைவனை உள்ளன்புடன் வழிபட்டுத் தியானிக்கவேண்டும். தெய்வபக்தியொன்றே எமது வாழ்நாள் முழுவதும் எம்மோடு துணையாக நிற்கின்றது" என்று ஆத்தியடிப் பிள்ளையார் கோவிலில் 'கார்த்திகைத் தீபம்' என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றுகையில் பருத்தித்துறை ஸ்ரீ சாரதா நிலைய சேவாச்சிரமப் பொதுச் செயலாளர் திரு. பிர. இரத்தினசபாபதி குறிப்பிட்டார்

## ஒரு லட்சத்தில் தொழிற்பயிற்சி நிலையம்

உடுப்பிட்டி, ஞாயிறு

மாணவர்களுக்குத் தொழிற்பயிற்சி அளித்து அவர்களின் எதிர்கால வாழ்விற்கு வழிகாட்டுமுகமாகப் பருத்தித்துறை ஸ்ரீ சாரதா நிலைய சேவாச்சிரமம் ஒரு லட்சம் ரூபா செலவில் தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றை நிறுவத் திட்டமிட்டுள்ளது. இத்தொழிற்பயிற்சி நிலையத்தின் முதற்கட்ட வேலைகள் தற்போது 25,000 ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த ஆச்சிரமத்தில் இத்தொழிற்பயிற்சி நிலையத்தை இயக்குவது சம்பந்தமாகக் கல்கத்தாவிலுள்ள இராமகிருஷ்ணமிஷன் தலைமை அலுவலகத்தில் ஆலோசனைகள் பெற்று அங்கு இயங்கும் இராமகிருஷ்ணமிஷன் தொழிற் பயிற்சிக்கூடத்தைப் பார்வையிட்ட சேவாச்சிரமப் பொதுச் செயலாளர் திரு. பிர. இரத்தினசபாபதி கடந்த வாரம் திரும்பியுள்ளார். இதைவிட பருத்தித்துறை நகரசபையின் அங்கீகாரம் பெறுவதற்காக இத்தொழிற்பயிற்சி நிலைய மாதிரி வரைபடம் ஒன்று சேவாச்சிரமத்தால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ......

## தரம் உயரும்

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் கிராமசபைப் பகுதியில் மேலும் இரு புதிய மகாவித்தியாலயங்கள் உதயமாகவுள்ளன. மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை, சுழிபுரம் ஆறுமுக வித்தியாசாலை ஆகிய இரண்டுமே மகாவித்தியாலயமாக்கப்படவுள்ளனவாகும்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்குவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 6-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org